# 26. டிஜிட்டல் சகாப்தத்தில் மூத்த குடிமக்களுக்கான வளர்ந்து வரும் பங்கு

2011-ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பிறகு, நான் விரும்பியதை விருப்பப்படி செய்ய முடியும் என்று மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். வாரத்திற்கு 2 நாள்களைக் கற்பித்தலுக்கும், 1 நாள் MHRD/ AICTE பணிக்கும், 1 நாள் SMF/ IIM -களின் சேவைப் பணிகளுக்கும், 1 நாள் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கவும், ஞாயிற்றுக்கிழமை அன்று எந்த அலுவலகப் பணியையும் எடுக்க வேண்டாம் என்றும் எண்ணினேன்.

இதை 3 மாதங்கள் தொடர்ந்து செய்ய முடிந்தது, ஆனால் அதன் பிறகு என் உடல்நிலை என்னுடைய வழக்கமான பணிகளுக்கு ஒத்துழைக்கவில்லை பல விதமான நோய்களும் என்னை முற்றுகையிடத் தொடங்கின, அவற்றில் முதன்மையானது முழங்கால் மூட்டு வலி மற்றும் இதயத்தின் கனம்.

நான் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கும் பணிகளை முழுவதுமாக ரத்து செய்தேன். படிப்படியாக மற்ற நோய்களும் தொற்றிக் கொள்ள ஆரம்பித்தன, 2014-15-இல், கண்ணில் ரத்தக்கசிவு, டின்னிடஸ், ஸ்பான்டைலிடிஸ், புரோஸ்டேட், உட்புற வறட்சியால் இரத்தப்போக்கு உட்பட பத்துக்கும் மேற்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டேன். இவை தவிர இந்த வயதிற்குரிய நோய்களான உயர் ரத்த அழுத்தமும் நீரழிவு நோயும் சேர்ந்து கொண்டன. இவை அனைத்தின் விளைவாக எனது கல்வி நடவடிக்கைகள் சார்ந்த பணிகள் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டன. இறுதியாக நான் முழங்கால் மூட்டு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. என்னுடைய இயல்பான நிலையை நான் அடைய ஆறு மாதங்கள் ஆயின.

ஆனால் இதற்கிடையில் குடலிறக்க பிரச்சனை தலைதூக்கியது. சாதாரணமாக இது எளிமையான அறுவை சிகிச்சைதான் ஆனால் அது பெரும் உபத்திரவமாக மாறியது. நான்கு மாதங்களுக்கும் மேலாக கடுமையான வலியால் அவதிப்பட்டேன், அதனால் நான் என் நாள்களை எண்ணத் தொடங்கினேன், நான் கடவுளிடம் என்னை உங்களிடத்தில் அழைத்துக் கொள்வது என்றால் அதை விரைவில் செய்யலாம், எதற்காக இந்தச் சித்திரவதை? என்று கோபப்பட்டேன். ஒரு நாள் இரவு எனக்கு இப்படித் தோன்றியது, இயற்கை அதன் விதியின்படி பயன்பாட்டில் உள்ள பொருளை எடுத்துக் கொள்ளாது. "இன்னும் ஏதாவது செய்ய வேண்டியிருக்கிறதா?" என்று நான் ஆச்சரியப்பட்டேன்.

நீண்ட காலத்திற்கு முன்பு எனது மாணவர்களுக்கு ஒரு புத்தகத்தை வெளியிடுவதாக நான் உறுதியளித்தேன், ஆனால் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை.இது முன்னோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியாக 1994-இல் ஐஐஎம் லக்னோவுக்கு நாங்கள் கற்பனை செய்த கல்வி வளப் பூங்காவை நிறுவும் கனவின் ஒரு பகுதியாகும். "அதுதான் என்னால் செய்ய முடியும்" என்று நினைத்தேன். ஆனால் விரல் மூட்டுகளில் கடுமையான வலி இருந்தது. கடுமையான வலி இருந்ததால், நான் விரும்பிய படி தட்டச்சு செய்யவோ எழுதவோ முடியவில்லை மேலும் 15-20 நிமிடங்களுக்கு மேல் மடிக்கணினித் திரையை என்னால் பார்க்க முடியவில்லை. ஏனெனில் பார்வை மங்கலாகவும் ஸ்பான்டிலைட்ஸ் வலி சரமாரியாகவும் என்னைச் சோர்வடையச் செய்தது. எனக்கு உதவி செய்ய அலுவலகமோ அல்லது ஊழியர்களோ இல்லாதது என்னை மேலும் சிரமத்திற்கு உள்ளாக்கியது.

## முதுமை மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்

முதுமை என்பது அதற்குரிய பலவிதமான உடல் குறைபாடுகளுடனான பிரச்சனைகளைக் கொண்டு வருகிறது. ஆனால் அது சில நன்மைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. முதுமையில் ஒருவருக்கு அதிக ஓய்வு நேரமும் தாம் விரும்பிய காரியங்களைச் செய்ய அதிக நெகிழ்வுத் தன்மையும் உள்ளன. மூத்த குடிமக்களுக்கு பெரும்பாலும் இரவில் தூக்கம் வராது, குடும்பம் நல்ல முறையில் சீரமைந்து விட்டால் பொருளாதாரச் சுமையும் குறைந்து விடும். ஆனால் அடிக்கடி தனிமையான உணர்வு தோன்றும் அதனால் வேறு ஊர்களில் உள்ள எனது மகள்களின் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று உணர்வேன். மனைவியும் என்னுடன் பயணம் செய்வதால் கடிதங்கள்/ காசோலைப் புத்தகம் போன்றவற்றைச், சேகரிக்கக் கூட யாரும் இருக்க மாட்டார்கள். சில சமயங்களில் பணம் எடுக்கப், பல்வேறு ரசீதுகளைச் சரி செய்ய, வங்கிக்குக் கூடச் செல்ல முடியாது.

அதிர்ஷ்டவசமாக, டிஜிட்டல் மயமாக்கல் பல வழிகளில் விரிவடைகிறது, உயர் தெளிவுத்திறன் கொண்ட கேமரா ஸ்மார்ட்போன் மொபைல்கள், பிராட்பேண்ட் / வைஃபை இணைய வசதிகள் போன்றவை சில வரம்புகளுடன் உள்ளன. இவை வெளியூருக்குச் சென்றாலும் பல விஷயங்களை அங்கிருந்து கவனித்துக் கொள்ள நமக்கு உதவுகின்றன.

டிஜிட்டல் சகாப்தம் பல வகையில் பொருத்தமானதாக உள்ளது. பல புதிய விஷயங்களையும் (பணி ஓய்வு பெறும் முன் கிடைக்காத நேரத்தை) முதுமை மற்றும் அடுத்த தலைமுறையின் முயற்சிகளுக்கு ஆதரவாகத் தாத்தா பாட்டியினர் பங்கு வகிக்க முடியும் என்னும் கருத்தை எனது அனுபவம் உறுதிப்படுத்துகிறது.

அசாதாரணமான ஆனால் பயனுள்ள அனுபவங்களின் அடிப்படையில் இலக்கியத்தை உருவாக்குதல், எப்படி இருந்தாலும், எப்பொழுது யோசனை தோன்றினாலும் குளியலறை அல்லது நள்ளிரவில் (தூக்கம் வராதபோது), விமானத்திற்காகக் காத்திருக்கும் பொழுதும் அல்லது ரயிலில் பயணம் செய்யும்பொழுதும் நான் சில வாக்கியங்களை எழுத ஆரம்பித்தேன் ஏனென்றால் அவசரம் இல்லை, கவலையும் இல்லை. சில பக்கங்கள் எழுதப்பட்ட பிறகு நான் அவற்றைப் புகைப்படம் எடுத்து அல்லது ஸ்கேன் செய்து என் மனதில் பதிந்த முதல் பெயருக்கு மின்னஞ்சல் அனுப்புவேன். அது IIM லக்னோவில் எனது பழைய செயலக உதவியாளராக இருக்கலாம். கோழிக்கோடு, பேராசிரியராகவோ அல்லது மேலாண்மை நிறுவன இயக்குநராகவோ இருக்கலாம். ஜபல்பூர், கான்பூர், புனே அல்லது லக்னோவில் எனக்காகத் தட்டச்சுச் செய்த சில நம்பகமான சைபர் கஃபேக்களையும் என்னால் கண்டுபிடிக்க முடிந்தது. அவர்களுக்கான கட்டணத்தை என்னால் ஆன்லைனில் செலுத்த முடிந்தது. நானே எடிட்டிங் செய்து சில ஜெராக்ஸ் கடைகளில் பிரிண்ட் அவுட் எடுத்து விடுவேன். ஐந்துக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், 25-க்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நீண்ட வழக்குகள் மற்றும் புத்தகங்களின் அத்தியாயங்கள் இப்படித் தயாரிக்கப்பட்டன.

கடந்த கால அனுபவங்களைப் பிரதிபலிப்பதும், அத்தகைய பதிவுகளைத் தயாரிப்பதும், இந்திய அமைப்புகளின் செயல்பாடுகள், இந்திய ஹனுமான்களான இந்திய மக்களின் சக்தி மற்றும் நடத்தை பற்றிய பல புதிய நுண்ணறிவுகளை அளித்தன. அச்சுறுத்தல்கள் வாய்ப்புகள் ஆகவும் மனத்தடைகள் என்பது நமது பலவீனம் என்பதையும், இது எனக்கு உணர்த்தியது. தடைகளைக்

கடப்பதற்குப் படைப்பாற்றலைப் பயன்படுத்துதல், மனிதவளத்தை மறுபரிசீலனை செய்தல் (வளர்ச்சி மற்றும் பல்வகைப்--படுத்தலை நிர்வகிப்பதற்கான இரண்டு வார்த்தைகள்), மற்றும் வளங்கள் (சொத்து அல்லது பொறுப்பு?), ஒரு மேலாண்மை நுட்பமாகச் சரிபார்ப்புப் பட்டியலின் சக்தி, விருப்பப்படியான வளர்ச்சி, நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கான நிறுவன வணிகங்களின் நுட்பங்கள், பல்வேறு பங்குதாரர்களின் ஆதரவிலிருந்து பயனடைதல், சுயாட்சி போன்றவற்றைப் பெறுதல். இவை சிறுகதைகளுக்கு வழிவகுத்தது, மேலும் மேம்பட்ட விவாதத்திற்கு வர்க்க ஆர்வத்தை உருவாக்க இவை குறுகிய வழக்காய்வுகளாக அர்த்தமுள்ளதாகப் பயன்படுத்தப்படலாம்.

கிங்பிஷர் ஏர்லைன்ஸ், அதானி எண்டர்பிரைசஸ் போன்ற நீண்ட வழக்குகளிலும் இதே தான் நடந்தது. இந்த வழக்குகள் வியூக மேலாண்மைப் பாடப்பிரிவில் வியூகத் தடம் புரள்தல் போன்ற பல கருத்துகளையும் செம்மைப்படுத்தின. ஏழு நாள்கள் மருத்துவமனையில் சுகமாக இருந்தபோது ஒரு குறிப்பை உருவாக்கியது மிகவும் உற்சாகமான அனுபவம். இது ஒரு வணிகம்! லக்ஷ்மண் ரேகையைக் கடக்கும்போது பேராசைப் பகுதிக்குள் நுழையும் போது வேலை செய்யும் நுண்ணறிவைக் கொடுத்தது.

எழுதப்பட்ட வழக்குகள் படிப்படியாகத் தொகுக்கப்பட்டு, வியூக மேலாண்மை குறித்த ஐந்து தொகுதி வழக்குப் புத்தகத்தை உருவாக்குவதற்காக வைக்கப்பட்டன. ஆசிரிய உறுப்பினர்கள் தங்கள் தேவைக்கான வழக்குகளைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவ, வழக்குப் பகுப்பாய்வு வழிகாட்டியை உருவாக்கவும் இது வழிவகுத்தது.

## இணைய பயன்பாடு

மென் பிரதிகள் கிடைத்ததால், லக்னோவில் எனது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக நான் வாடகைக்கு எடுத்திருந்த இணையதளத்தில் அவற்றைப் போட ஆரம்பித்தேன். வியூக மேலாண்மை கருத்துகள் இணையதளத்தை இயக்கும் போது, அத்தகைய இணையதளத்தை இயக்கக் கற்றுக்கொண்டேன், இருப்பினும், அது html வடிவத்தில் இருந்தது. இருந்தபோதிலும், இது ஓர் அறிவுப் பெட்டகமாக மாறியது, மேலும் எந்தவொரு வழக்கையும் அல்லது அத்தியாயத்தையும் உடனடியாகத் திரையில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும், இதன் மூலம் அனைத்துப் பங்கேற்பாளர்களும் விவாதத்தின் போதும் ஒரே அலை நீளத்தில் அதைப் படிக்கலாம். அவ்வப்போது தேவைப்படும் கூடுதல் தகவல்களைப் பதிவிறக்கம் செய்யலாம்.

இது குறுகிய வழக்குகளை (சுருக்கமான வழக்கு) எழுதுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது, மேலும் காட்சிப்படுத்துதல் மற்றும் குறிப்புகளைச் சேர்ப்பதன் மூலம் இது வகுப்புக் கலந்துரையாடல்களின் போது விரிவாக்கப்படலாம். தொடர்ச்சியாக உள்ள ஒரு நீண்ட வழக்கைச், சிறிய பகுதிகளாகச் சுருக்கிச், சில காட்சிப்படுத்துதல் மற்றும் பரப்பப்பட்ட தகவல்களுடன், பின்னர் வகுப்பில் சேர்க்கப்படும் வாய்ப்பை வழங்குகிறது.

பிந்தைய தேதியில், இந்த ஆண்டு மே மாதம் எனது பிரிண்டர் கார்ட்ரிட்-ஜை நிரப்புவதற்காகச் சென்றேன், மேலும் விற்பனையாளருக்கு வலை வடிவமைப்பு மற்றும் 'php' வடிவத்தை வழங்குவதில் நிபுணத்துவம் இருப்பதைக் கவனித்தேன், இது மிகவும் பயன்பாட்டிற்கு ஏற்றதாக இருந்தது. ஒருமுறை எனது html தளம் தகர்ந்ததால் நான் மிகவும் சிரமப்பட்டேன். நான் ஒரு தளத்தை (ekhaikk.in) வாடகைக்கு எடுக்க அவருடைய உதவியை நாடினேன், அதை இயக்கவும் மாற்றவும் கற்றுக்கொண்டேன். எனவே நான்

இரண்டு வலைத்தளங்களையும் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்த முடியும், ஒவ்வொன்றும் மற்றொன்றுக்குக் காப்பாக இருக்கும்.

உலகின் எந்த இடத்திலிருந்தும் 24 மணி நேரமும் பயன்படுத்தக்கூடிய வகையில், வழக்குகள், உரை, ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றை எளிதாகப் பயன்படுத்துவதற்கு இணையதளம் உதவியது. எந்த ஒரு வெளியீட்டாளரின் அனுமதி மற்றும் சிக்கல்களையும் பெறாமல், SM ஆசிரியர்களும் மாணவர்களும் எனது உள்ளடக்கத்தைப் பயன்படுத்த அனுமதிக்கவும், தேவைப்பட்டால் குறைந்த விலையில், இலவசமாக விநியோகிக்கவும் இந்த வலைத்தளம் எனக்கு நெகிழ்வுத் தன்மையை அளித்தது.

## அச்சிடுதல் மற்றும் வெளியீடு

நான் பொருள்களை A4 அளவில் நகலெடுத்து அவற்றைச் சுழல் பிணைப்பாகப் பெறுவேன். இருப்பினும், நான் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்லும்போது அவை எடுத்துச் செல்வதற்குப் பருமனாக மாறிவிட்டன. னக்கு நெருக்கமாக இருந்த ஓர் டாக்ஸி ஓட்டுனர் நகலெடுக்கும் சேவையை தொடங்கினார்.அனைத்து வழக்குகள் மற்றும் புத்தகங்களை 18 புள்ளிகளாக மாற்றி, பின்னர் (A4/2 அளவு) கையேட்டு வடிவத்தில் அச்சிடுவதற்கு நாங்கள் ஒன்றாக வேலை செய்தோம். நான் கல்வித் தலைவராக இருந்தபோது எனது அலுவலக உதவியாளருடன் சேர்ந்து கற்றுக்கொண்டதை வைத்து நானே பைண்டிங் செய்தேன். இது கனமான A4 அளவுத் தொகுதிகளை மிகவும் எளிமையான தொகுதியாக மாற்ற வழிவகுத்தது. வசதியாக எடுத்துச் செல்ல முடிந்தது. 100-150 பக்கங்கள் கொண்ட நீண்ட புத்தகங்களை A4/2 அளவில் பிரித்தேன். என்றாலும் நான் லக்னோவிலிருந்து டெல்லிக்கும் பெங்களூருக்கும் செல்லும் போதெல்லாம் கனமான அச்சிடப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது.

இறுதியாக, முழுப் பாடப்பொருளையும் படிப்படியாகப் பதிவேற்றம் செய்து, நான் எங்கு சென்றாலும் பிரிண்ட் அவுட்களைப் பெற முடிவு செய்தேன், இதனால் எனது பணி தடைப்படுவதை தடுக்க முடிந்தது.

குர்கானில், DISH-இன் (ஒரு நோய்) மேம்பட்ட நிலை காரணமாக நான் வீட்டை விட்டு வெளியேற முடியாததால், நகலிட்டு, வீட்டிலேயே பொருள்களை டெலிவரி செய்து கொண்டிருந்த நபருடன், மென்மையான அட்டைப் புத்தக வடிவில் அச்சடித்துப் பைண்டிங் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தேன். நோயால் ஏற்பட்ட மயக்கத்தால், வீட்டிற்குள் நடமாடுவது கடினமாக இருந்தது. நான் லக்னோ, மேதாந்தா குர்கான், மணிப்பால் மருத்துவமனைகள் மற்றும் பெங்களூரு நாராயண் ஹிருதயாலயா ஆகிய இடங்களில் உள்ள மருத்துவர்களைத் தொடர்பு கொண்டேன். மீண்டும் வாழ்க்கையின் மீதான நம்பிக்கையை இழந்தேன். அதிர்ஷ்டவசமாக ஓர் அக்குபிரஷர் நிபுணர் காந்தச் சிகிச்சையை அளித்தார், இது எனது நிலையைச் சிறிது மேம்படுத்தியது.

நகலிடுபவர் நண்பராகி, எங்கு வேண்டுமானாலும் கொரியர் மூலம் டெலிவரி செய்வதாக உறுதியளித்தார். நான் அவருக்கு ஒரு சா∴ப்ட் காப்பியை அனுப்ப வேண்டியிருந்தது, அவர் செய்யும் பணிகளுக்காக மின்னணுப் பணப்பரிமாற்றம் மூலம் நான் பணத்தைச் செலுத்தி விடுவேன்.

பெங்களூரில் எனது குடியிருப்புக்கு அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் ஸ்பானிஷ் மொழிகள் கற்கும் போஸ்டரைக் கண்டேன். ஒரு

நட்பு வளர்ந்தது, மேலும் எனது கதைகளில் ஒன்றை மூன்று வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்ப்பதாக அவர் உறுதியளித்தார். நான் ஹிந்தியில் மொழிபெயர்த்தேன், இந்தித் தட்டச்சுக்கான கூகுள் ஆதரவுக்கு நன்றி. இந்து நாளிதழில் வெளியான இந்தக் கதை படிப்படியாக 12 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

மொழிபெயர்ப்பாள நண்பர் பின்னர் 25 கதைகளையும் மூன்று வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்த்தார். இதனால் எனது கதைகள் (தாத்தாவின் கதைகள்) ஐந்து மொழிகளில் கிடைக்கின்றன.

இந்தியாவில் அதிகம் பேசப்படாத மூன்று மொழிகளில் ஐந்து மொழிகளில் கதைப் புத்தகத்தைப் பெறுவது, மற்ற நாடுகளுக்கு அதை வெளிப்படுத்த வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. எனவே அவர்களுக்காக ISBN எண்ணைப் பெறவும், உலகளாவிய வாசகர்களுக்காக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் கற்றுக்கொண்டேன். இந்தச் செயல்பாட்டில் ISBN (MHRD) சுய வெளியீட்டை அனுமதிக்கிறது என்பதை அறிந்துகொண்டேன். எனவே வணிகம் சார்ந்த வெளியீட்டாளர்களிடம் வங்கிச் சேவை இல்லாமல் அனைவருக்கும் அதைத் திறக்கும் வகையில் சுய-வெளியீட்டு வழியை நான் மேற்கொண்டேன்.

பிறகு பெங்களூரில் நகலெடுக்க ஆள் தேடினேன். குறைந்த செலவில் புத்தகங்களை அச்சிடக்கூடிய ஒருவரைக் கண்டேன். விஐபிகளுக்காக ஒரு தனிப் பயனாக்கப்பட்ட நகலை அச்சிடுவதற்கான எனது தேவையை இது பூர்த்தி செய்தது. புத்தகங்களை மின்புத்தகம் மற்றும் தாள் வடிவத்தில் வெளியிடக் கற்றுக்கொண்டேன்.

## ஐஐஎம்-களின் பொதுவான இணையதளம்

IIMK-யில் இயக்குநராக இருந்த எனக்கு மற்ற நிறுவனங்களிலிருந்து நிபுணர்கள் அடிக்கடி தேவைப்பட்டனர். மேலும் பலர் பல்வேறு நோக்கங்களுக்காக ஐஐஎம்-களைப் பற்றி என்னிடம் கேட்டனர். ஒவ்வொரு IIM-க்கும் ஒரு தனிப்பட்ட IP முகவரி இருந்தது மற்றும் அதை நினைவில் கொள்வது கடினமாக இருந்த. எனவே அனைத்து ஐஐஎம் -களின் பொதுவான இணையதளத்தை அந்தந்த இணையதளங்களில் உள்ள தகவல்-இணைப்புகளிலிருந்து உடனடிக் குறிப்புக்காகத் தயார் செய்தேன். இப்போது ஒருவர் www.iimsworld.in என்ற ஒரு இணையதள முகவரியை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் அல்லது, www.ekhaikk.in என்ற இணையதள முகவரியில் இருந்து, எந்த ஐஐஎம் இணையதளத்திற்கும் செல்லலாம்.

எனது படைப்புகளை மொழிபெயர்க்கும் போது, வளர்ந்து வரும் IIM குழுமங்களைப் பற்றி ஆங்கிலம் தெரியாதவர் கூடத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். எனவே உலக நலனுக்காகப் பொது இணையதளத்தை ஆறு மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றேன்.

## ஆராய்ச்சி

2011-இல் இந்திய உச்ச நீதிமன்றத்தின் 2G ஊழல் தீர்ப்பு மற்றும் 2012-இல் நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு தொடர்பான CAG அறிக்கைக்குப் பிறகு சமூக ஆர்வலர் அன்னா ஹசாரேவால் ஒரு போராட்டம் தொடங்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் காரசாரமான

விவாதங்கள் தொடங்கி மத்திய அரசு மீது ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. அமைச்சர் பொய் பேசுகிறாரா? உண்மைகளை சரிபார்க்க வழி ஏதும் இல்லை.

அதில் தமக்கு எந்தப் பங்கும் இல்லை என்றும், தமது ஆட்சிக் காலத்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒதுக்கப்படவில்லை என்றும் நிலக்கரி அமைச்சர் கூறி வருகிறார். ஒரு நாள் நான் நிலக்கரி அமைச்சகத்தின் இணையதளத்தை பார்வையிட்டேன், அவருடைய காலத்தில் 4000 மெட்ரிக் டன் நிலக்கரித் தொகுதி ஒதுக்கப்பட்டதைக் கண்டு திகைத்துப் போனேன். இந்தத் தகவல் நிலக்கரி அமைச்சகத்தின் இணையதளத்தில் உள்ளது. மேலும் ஆய்வு செய்ததில், ஒதுக்கீட்டில் பெரும்பாலானவை தன்னிச்சையாக நடந்துள்ளது என்பது தெரிய வந்தது. கருவூலத்திற்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து சிஏஜி-யின் மதிப்பீடு அதிர்ச்சியளிக்கிறது. ஆனால் மிக முக்கியமாக எனது பகுப்பாய்வு இழப்பு அதிகமாக இருப்பதைக் காட்டுகிறது. வேறுபாட்டைப் பகுப்பாய்வு செய்ய வழி இல்லை.

தொழில் துறைத் தலைவர்களின் நடத்தை பற்றி யோசித்தால் அவர்கள் உண்மையில் மோசடிகளில் ஈடுபடுகிறார்களா? என்பதை அறிய வேண்டியுள்ளது. அங்கு ஏராளமாக மோசடி நடப்பது தெரிந்தது. அவர்களின் வணிக முடிவுகளில் நாட்டின் நலன் எவ்வளவு பாதுகாக்கப்படுகிறது? மோசடிகள் உண்மையாக இருந்தால் தொழில் மற்றும் பொருளாதாரம் பாதுகாப்பான கைகளில் உள்ளதா? இதை அனைவருக்கும் பொதுமைப்படுத்த முடியுமா? நல்லவர்களைக் கெட்டவர்களிடமிருந்து வேறுபடுத்துவது எப்படி? எது அவர்களை மோசமாக்குகிறது? என்பதையும் அறிய வேண்டியுள்ளது.

அரசு எடுக்கும் முடிவுகள் அவர்களை அவ்வாறு செய்ய ஊக்குவிக்கின்றனவா? அவர்களின் வழிகளைச் சீர்செய்ய நாம் என்ன நடவடிக்கை எடுப்போம்? நீதிமன்றங்கள் அவர்களைச் சிறையில் அடைக்கத் தொடங்கினால், சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தொழிலை நடத்துவது யார்?

மீடியா, பொதுமக்களுக்குச் சரியான வடிவத்தைக் கொடுத்துத் தனது பொறுப்பைச் சரியாக நிறைவேற்றுகிறதா? சவால்களை விரைவாகக் கையாளும் அளவுக்கு நீதித்துறை திறமையானதா? இத்தகைய கேள்வி மன அமைதியை மோசமாக பாதிக்கத் தொடங்கியது.

ஒரு நாள் நான் CAG இணையதளத்தை பார்வையிட்டேன், நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு குறித்த CAG அறிக்கையைப் பார்க்க முடிந்தது. பகுப்பாய்வுக் காரணங்களை வெளிப்படுத்தியது, சிஏஜி செய்த சில அனுமானங்களால் வேறுபாடுகள் ஏற்பட்டன, இவை ஏற்றுக்கொள்ள முடியாதவை, என்று நான் உணர்ந்தேன். CAG மதிப்பீட்டை விடக் கருவூலத்திற்கு ஏற்பட்ட இழப்பு இரண்டு மடங்கு அதிகம் என்பதை எனது பகுப்பாய்வு காட்டுகிறது. ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று ஏப்ரல் 2014-இல் ஒரு மாநாட்டிற்கு அனுப்பப்பட்டது, மே, 2014-இல் அவர் தமது போர்ட்டலைப் பொது மக்களுக்காகத் திறந்தபோது பிரதமருக்கு அனுப்பப்பட்டது. ஆகஸ்ட் 2014-இல், இந்திய உச்ச நீதிமன்றம் தன்னிச்சையான மற்றும் சட்டவிரோதத்தின் அடிப்படையில் ஒதுக்கீட்டை ரத்து செய்து, சிஏஜி சுட்டிக்காட்டியவை மட்டுமல்ல அனைத்துத் தொகுதிகளும் ஏலத்திற்குக் கேட்டது. ஏலம் தொடங்கியதும் எனது மதிப்பீடுகள் நிரூபணமாகி அவை உண்மையாக மாறத் தொடங்கின.

2013 ஆகஸ்டில், மல்டி பிராண்ட் சில்லறை வணிகத்தில் (MBR) அன்னிய நேரடி முதலீடு குறித்து நாடாளுமன்றம் விவாதிக்கத் தொடங்கியது, நாடாளுமன்றத்தில்

சலசலப்பு ஏற்பட்டது. இதைச் செய்யாவிட்டால், 1991-ஐ விட மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று பிரதமர் கூறினார். MBR-இல் அந்நிய நேரடி முதலீடு என்பது விருப்பமான விஷயமன்று, ஆனால் அவசியமானது என்று நிதி அமைச்சர் கூறினார். 20 வருடச் சீர்திருத்தங்களுக்குப் பிறகு நாம் அதே நிலைக்கு அல்லது மோசமான நிலைக்குத் திரும்பிவிட்டோமா?, சீர்திருத்தங்கள் சரியான திசையில் செல்கின்றனவா? என எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ரிசர்வ் வங்கி மற்றும் பிற உண்மையான ஆதாரங்களின் ஆழமான பகுப்பாய்வு, இது ஒரு புரளி அழைப்பு அன்று, உண்மைதான் என்பதைக் குறிக்கிறது. எனக்குக் கிட்டத்தட்ட மாரடைப்பு ஏற்பட்டது மற்றும் பரிசோதனைக்காக அவசர சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்பட்டேன். கிடைக்கப்பெறும் தகவல்கள் கண்ணில் படுவதை விட நிறைய இருக்கின்றன என்றும் ஹவாலா மற்றும் பணமோசடிக் குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டுகிறது. சீர்திருத்தங்கள் முழுவதையும் புதிதாகப் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளதா? என்பதையும் பகுப்பாய்வு, சிந்திக்க வைக்கிறது.

படுக்கையில் இருந்தும் கூட, எல்லா நேரமும் கத்தி அழுதாலும், ஓய்வுபெற்ற கல்வியாளர்கள் டிஜிட்டல் சகாப்தத்தில் நிறைய அர்த்தமுள்ள ஆராய்ச்சிகளைச் செய்ய முடியும், என்பதை கிங்ஃபிஷர் ஏர்லைன்ஸ் மற்றும் அதானி எண்டர்பிரைஸ் லிமிடெட். பற்றிய இரண்டு வழக்கு ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.நேரமின்மை காரணமாக ஆராய்ச்சி செய்வது இளைய ஆசிரிய சகாக்களுக்குச் கடினமாக இருக்கலாம்.

எனது கடந்த 40 ஆண்டுக்கால எனது ஆராய்ச்சிப் பணியை நினைவுபடுத்தும் போது, ஒவ்வோர் ஆராய்ச்சிப் பணியும் தனித்தனியாகச் செய்யப்பட்டு, சிக்கல்கள் மற்றும் மதிப்புமிக்க பரிந்துரைகளைப் பற்றிய பயனுள்ள நுண்ணறிவுகளை அளித்தாலும், முழுத் தொகுப்புக்கும் மற்றொரு பயன் உள்ளது, இது தாராளமயமாக்கலுக்குப் பிந்தைய முன்னேற்றங்களின் முழுச் செயல்முறைக்கும் வரலாற்றுக் கண்ணோட்டத்தை வழங்குகிறது. இந்தியாவில், நாம் இழந்த வாய்ப்புகள், மாசு அல்லது போக்குவரத்து நெரிசல்கள் அல்லது வேலையின்மை அதிகரிப்பு, மற்றும் முதலீட்டு நெருக்கடி, என அனைத்து வகையான பிரச்சனைகளையும் சமாளிக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்று யோசனைகளை வழங்குகிறோம். எனவே முழுத் தொகுப்பும் “போஸ்ட் லிபரலைசேஷன் டெவலப்மென்ட்ஸ் இன் இந்தியா: ஒரு 25 வருட ஆராய்ச்சிப் பயணம்” என்ற புத்தகத்தில் ஐந்து தொகுதிகளாக வெளியிடப்பட்டது.

## கற்பித்தல் / எம்.டி.பி

IIM கோழிக்கோடு இயக்குநராக, ஆன்லைன் படிப்புகளை நடத்துவதற்கான முதல் அனுபவத்தைப் பெற்றேன், வழக்கு கலந்துரையாடல் நடத்துவது உட்பட, அது நேர்முறை வகுப்பறைக் கலந்துரையாடல்கள் போலவே சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் இருப்பதைக் கண்டேன். 6 புதிய ஐஐஎம்-களை அமைப்பதற்கான எங்கள் அறிக்கையின் ஒரு பகுதியாக வீடியோ கான்பரன்சிங் வசதிகளை அமைக்கப் பரிந்துரைத்திருந்தேன். ஆனால் புதிய ஐஐஎம்-களை விடப் பழையவை கூட விருந்தினர் விரிவுரைகள் மற்றும் விருந்தினரின் வீடியோ கான்பரன்சிங் ஸ்டுடியோ இல்லாமல் தொலைதூரப் பகுதியில் இருந்து வழக்கமான நிகழ்ச்சிகள் மற்றும் MDP-களில் அவ்வப்போது விரிவுரைகளை நடத்துவதன் மூலம் பெரிதும் பயனடையலாம் என்று நான் உணர்ந்தேன்.

தொழில்நுட்பம் உள்ளது, நான் பரிசோதனைக்கு தயாராக இருந்தேன், ஆனால் முயற்சி செய்வதில் முழு வெறுப்புத் தோன்றியதால் எனது முயற்சிகள் தோல்வியடைந்தன. நாம் அதைத் தடையற்றதாக மாற்ற வேண்டும், அது பயன்பாட்டுக்கு

வரும் வரை சாத்தியமில்லை. பெரிய மற்றும் சாத்தியமான நன்மைகளான, கடுமையான செலவுக் குறைப்பு, சேமிப்பு, நேரம், போன்ற அனைத்தையும் உணரப்படவில்லை. தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களும் அதற்குத் தயாராக இல்லை. இது உடனடியாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

MDP-ஐப் பொறுத்தவரை, பொழுதுபோக்குத் தாளில் (அடுத்த பகுதியைப் பார்க்கவும்) பாடப் பொருள்களை உட்பொதித்து இடைவேளையின் போது பொழுதுபோக்குடன் தொந்தரவு இல்லாத வகுப்பை நடத்துவது மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று நான் கண்டேன்.

## பொழுதுபோக்கு

நான் உடல் நலக் குறைவால் படுக்கையில் இருந்த போது மயக்கம் காரணமாக என்னால் என் அன்றாடப் பணிகளைச் செய்து கொள்ள முடியவில்லை அதனால் எப்படி நேரத்தை கடத்துவது என்றும் புரியவில்லை. அப்பொழுது பணி ஓய்வு பெற்றவர்களுக்காக ஒரு பொழுதுபோக்கு இணையதளம் வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. 'youtube' இணைய தளத்தைப் பார்க்க ஆரம்பித்தேன். எனக்குப் பிடித்த பாடல்களைக் கேட்க முடிந்தது.

வேடிக்கையான நகைச்சுவைகள், கஜல்கள், ஹாஸ்யக் கவி, சம்மேளனம் மற்றும் பல விஷயங்கள் இருந்தன. நான் அவற்றை ஓர் எக்செல் தாளில் உட்பொதித்து பதிவேற்றினேன். படிப்படியாக, அடுத்த தலைமுறைக்கான பாடல்கள், வாட்ஸ்அப்பில் இருந்தும் சேர்க்கப்பட்டன. எனது நோக்கத்திற்காக நான் அவற்றைப் பதிவேற்றினேன், நான் சலிப்பு, மனச்சோர்வு அல்லது தூக்கத்தை இழக்கும் போதெல்லாம் இவற்றை அனுபவிக்க முடியும். நான் சில ஜோடி இயர்போன்கள், மூன்று வைஃபை/பிராட் பேண்ட் டாங்கிள்களை வெவ்வேறு மொபைல் சேவை வழங்குநர்களிடமிருந்து வாங்கினேன், இரண்டு செட் ஸ்பீக்கர்கள், இரண்டு மொபைல்கள். இரண்டு பழைய மடிக்கணினிகளும் இந்த முயற்சியை ஆதரித்தன.

பல்வேறு நகரங்களில் உள்ள பல்வேறு நோய்களுக்கான எனது மருத்துவர்களின் விவரங்கள், வெவ்வேறு இடங்களில் உள்ள மருந்தாளுனர்களின் தொடர்பு எண், வங்கிக் கணக்கு விவரங்கள் (உள்நுழைவுடன்), முன்பதிவு செய்த டிக்கெட் விவரங்கள், டாக்ஸி எண்கள் மற்றும் எனக்கு அவ்வப்போது தேவைப்படும் பிற விவரங்களையும் இதில் பதித்துள்ளேன். கைப்பெட்டி ஒரு சேமிப்புப் பையைப் போல எனது பொருள்களின் ஒரு பகுதியாக மாறியது. டிஜிட்டல் சகாப்தம் 65+ வயதில் உள்ள மூத்த குடிமக்களுக்கு, இளைய தலைமுறையினருக்குச் சுமை இல்லாமல் அனுபவிக்க ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது என்று நான் நினைக்கிறேன்.

டிஜிட்டல் யுகம் பின்வரும் கல்வி மற்றும் கல்வி சாராப் பங்களிப்புகளுக்கான வாய்ப்புகளை எனக்கு வழங்கியது.

1. ஐ.ஐ.எம் கைப்பெட்டி ஒருங்கிணைத்தல்
2. ஐ.ஐ.எம் பற்றிய தகவல்களை பன்மொழி இணையதளம் மூலம் உலகம் முழுவதும் பரப்புதல்
3. பன்மொழிக் கதைகளைத் 12 மொழிகளில் தயாரித்தல்
4. குறுகிய, நுண்ணறிவு, மேலாண்மைக் கதைகளைத் தயாரித்தல்
5. தனிப் பயனாக்கப்பட்ட புத்தகங்களைத் தயாரித்தல்

6. கற்பித்தலுக்கு உதவப் வழக்கு முறை மற்றும் வழக்கு எழுதுதல் குறித்த புத்தகம் தயாரித்தல்,

7. குறைந்த செலவு/ இலவசம்/ நெகிழ்வான வழக்கு புத்தகங்களை ஊக்குவித்தல்
8. வியூக மேலாண்மைப் பாடத்தை எளிமையாகப் புரிந்து கொள்ளக் குறைந்தவிலை / இலவசம், தேவையானவர்களுக்கு அணுகக் கூடிய விலையில் உள்ள கல்விப் பொருள்களைத் தயாரித்தல்
9. மருத்துவமனைப் படுக்கை / ஐசியூ-வில் இருந்து கற்பித்தல்
10. இயக்கம் இல்லாமல் பொழுதுபோக்கு.

## சவால்கள்

ஒவ்வொரு தொழில்நுட்ப வளர்ச்சியும் அதனுடன் தொடர்புடைய சில சவால்களையும் கொண்டுள்ளது. நான் பார்க்கக்கூடிய நான்கு முக்கிய சவால்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1. **செலவுக் காரணி:-** மாற்றம் வழக்கற்றுப் போவதன் காரணமாகச் செலவுகள் தனித்தன்மை வாய்ந்தவை. ஒவ்வோர் ஓய்வு பெற்ற நபரும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அதிக விலை கொண்ட ஸ்மார்ட்போன் மற்றும் மடிக்கணினிகளை வாங்க முடியாது. மேற்கூறிய நோக்கங்களுக்காக இணையச் சேவைக்கான கட்டணங்கள் அவற்றுடன் தொடர்புடையன ஆகும்.

2. **நிச்சயமற்ற தன்மை:-** மொபைல்கள், மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய நிச்சயமற்ற நிலை, வழக்கற்றுப்போனதன் காரணமாக மட்டுமன்று, பொருந்தக்கூடிய பிரச்சனைகளாலும், நம்ப முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளன, மேலும் சில சமயங்களில் தீவிர நம்பிக்கையாளர்களையும் கூட ஏமாற்றலாம்.

3. **முதுமையில் கற்றல்:-** இளம் வயதிலேயே கற்றுக்கொள்வது சவாலாக இருக்கும் நாட்டில், புதிய தொழில் நுட்பத்தையும் அதன் பயன்பாட்டையும் கற்றுக்கொள்வது வயதானவர்களுக்கு எளிதானதன்று, குறிப்பாகக் கணினி மற்றும் மொபைல்களின் கட்டளைகளில் "நோ நான்சென்ஸ்". ஒருவருக்கு வீட்டில் உதவி செய்ய இளைஞர்கள் இல்லையென்றால், அது கனவாக இருக்கலாம், மேலும் வயதானவர்கள் அமைதியாக "நவீன விஷயங்களைக் கற்றுக்கொள்ள எனக்கு வயதாகிவிட்டது" என்ற நோய்க்குறிக்குப் பின்வாங்குவார்கள்.

4. **நிலைத்தன்மை:-** கடைசியாக ஆனால் மிக முக்கியமான சவாலாக வெளிவருவது இறக்குமதி இல்லாமல் தொழில்நுட்பத்தின் நிலைத்தன்மை ஆகும். கரன்சி நோட்டை அச்சிடக் காகிதம் மற்றும் மை தயாரிக்க முடியாத நாட்டிற்கு, பயங்கரவாதிகளின் நிதியுதவி, தொழில் நுட்பத்தில் உள்ள அனைத்து முக்கியக் கூறுகளும் எதிரி/நண்பர் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும். அவர்கள் பூஜ்ஜிய அனுபவம் இல்லாத

வணிகத்தைக் கவனக்குறைவாக எடுத்துக்கொள்வது வங்கி, வர்த்தகம் மற்றும் விரிவாக்கத்தில் மீண்டும் மீண்டும் தோல்வியடைந்து வரும் நிலையில், வர்த்தகம் (பெரிய NPA-க்கு வழிவகுக்கும்) மற்றும் / நிபுணத்துவம் மற்றும் பெரிய கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் என்பதால், புதிய தயாரிப்பு மேம்பாட்டிற்கான உள்நாட்டு முயற்சியின்றி அத்தகைய உத்தி எவ்வளவு பாதுகாப்பானது மற்றும் உறுதியானது என்று ஒருவர் ஆச்சரியப்படுகிறார். அஸ்திவாரத்தின் பலத்தை உறுதி செய்யாமல், ஒரு கட்டடத்தின் 21-வது தளத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது போல் இருக்கிறதா?